

கள்ளக்குறிச்சி நகராட்சி, தியாகதுருகம் சாலை வி.எம். திடலில் 3வது கல்லை புத்தகத் திருவிழாவினை தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்த விழாவில், ரிஷிவந்தியம் அரசு மேல்நிலைப்பள்ளி 6ஆம் வகுப்பு பயிலும் மாணவன் 1330 திருக்குறளை எழுதி அய்யன் திருவள்ளுவரின் உருவத்தினை வரைந்தப் படத்தினைப் பார்வையிட்டு மாணவனுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார், இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

## தேசிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதி விடுவிக்கப்படும் என்பதா?

# தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய ரூ.2,158 கோடியை உடனடியாக ஒதுக்க வேண்டும்!

## கல்வியில் அரசியல் செய்யாதீர் – ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்கு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கடும் கண்டனம்!

திருச்சி, பிப். 16-

கல்வியில் அரசியல் செய்யாதீர்கள் என ஒன்றிய அமைச்சருக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தேசிய கல்விக்கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டால்தான் நிதி விடுவிக்கப்படும். ஏற்காத பட்சத்தில் 2 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க சட்டத்தில் இடமில்லை. அரசியல் காரணங்களுக்காகவே தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது என மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேட்டி அளித்திருந்த நிலையில், திருச்சி விமான நிலையத்தில் தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி அளித்த பேட்டி வருமாறு:-

ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. 2158 கோடி ரூபாயை ஒன்றிய அரசு உடனடியாக ஒதுக்க வேண்டும். ரூ.19 கோடி செலவில் அனைத்து அரசு பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு குறித்து பயிற்றுவிக்கிறோம்.

ஆனால் தற்போது SSA நிதி நிறுத்தப்பட்டுள்ளதால் அதனை தொடர இயலவில்லை.

ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துகிறது. இந்த இருமொழிக் கொள்கையால் தமிழ்நாட்டில் என்ன தீங்கு ஏற்பட்டுள்ளது. இஸ்ரோவில் பணிபுரியும் நாராயணன் உள்ளிட்ட பலரும் தமிழ்நாடு அரசு பள்ளியில் பயின்றவர்கள் தான்.

இந்தியா மட்டுமின்றி உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழ் வழி பயின்ற மாணவர்கள் தங்கள் திறமையை நிரூபித்து வருகிறார்கள்.சம்பந்தமே இல்லாமல் மும்மொழிக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவது ஏன்? என்று கேள்வி எழுப்பினர்.

**தமிழ் வழியின் முக்கியத்துவம்!**

கேவி எனப்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதேசமயம் சி.பி.எஸ்.சி./ மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் கட்டாயம் என சட்டம் இயற்றியுள்ளோம். கடந்தாண்டு தமிழ் வழியின் முக்கியத்து வத்தை வலியுறுத்தி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் புத்துணர்வு முகாம் நடத்தி உள்ளோம்.

இதுபோன்று தமிழ் சார்ந்த நல்ல பல திட்டங்களை கொண்டு வந்துள்ளோம்.

**மாணவர்களுக்கு தரமான கல்வி!**

பள்ளி மாணவ - மாணவியர்களின் நலன் கருதி மத்திய அரசு நிதி வழங்கா விட்டாலும் தொடர்ந்து நமது கொள்கைகளை விட்டு க்கொடுக்காமல் தமிழ்நாடு அரசு சொந்த நிதியில் மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கி வருகிறது,

தமிழ்நாடு முதல்வரின் செல்வாக்கு நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தாமல் எப்படி அவரது செல்வாக்கு உயர்ந்திருக்கும்? என கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசிடமிருந்து கல்விக்கான நிதியை பெறுவதற்கு தமிழ்நாடு முதல்வருடன் கலந்து பேசி நீதி மன்றத்தை அணுகுவதா ? இல்லையா? என முடிவெடுப்போம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி பேட்டியளித்தார்.

## கடலூர் மேற்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர்

# துரை. கருப்புசாமி தந்தை வே.துரைசாமி மறைவு!

## கழகத்தினர் – பொதுமக்கள் அஞ்சலி!

கடலூர் பிப்ரவரி 16.



கடலூர் மேற்கு மாவட்ட முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் நல்லூர் வடக்கு ஒன்றியம் என். நாரையூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் துரை. கருப்புசாமியின் தந்தை வே.துரைசாமி (வயது 96 ) அவர்கள் வயது மூப்பு காரணமாக நேற்று (15.02.2025) சனிக்கிழமை பிற்பகல் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருகிறோம்.

தகவல் அறிந்ததும் கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் நல்லூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்னாருக்கு பாக்கியம் என்ற மனைவியும் இளவரசி என்ற ஒரு மகளும் துரை.கருப்பசாமி என்ற ஒரு மகனும் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (16.02.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் வேப்பூர் அருகில் உள்ள நாரையூர் கிராமத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு அங்கு உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 18.2.2025 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள் : 15.02.2025.

**ஏ.கே.எஸ்.விஜயன்,**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

### ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி. எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 20-2-2025 வியாழக்கிழமை, காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள் : 15.02.2025.

**ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!




## கடலூர் மாவட்டத்தில்

# “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் 3ஆம் கட்ட சிறப்பு முகாம்கள்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்தனர்!

கடலூர், பிப்.17-

கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே.என். பேட்டை பவானி அம்மாள் மெட்ரிக்குலேஷன் பள்ளி, சின்ன காரைக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கம்பளிமேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூவாணிக்குப்பம் அரசினர் உயர்நிலைப் பள்ளி, தீர்த்தனகிரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் 3ஆம் கட்ட சிறப்பு முகாம்களை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணுபிரசாத் ஆகியோர் முன்னிலையில் துவக்கிவைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

தொடர்ந்து, தீர்த்தனகிரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற சமபந்தியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் பொதுமக்களுடன் உணவருந்தினர்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!**

அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையிலும் பல்வேறு சிறப்பு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றார். குறிப்பாக பெண்கள் வளர்ச்சி அடைந்தால் தான் நாடு முன்னேற்ற மடையும் என்ற வகையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முன்னோடி திட்டமாக பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் உள்ள சுமார் 7,78,296 குடும்ப அட்டைதாரர்களில் 4,50,134 குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- கலைஞர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் அன்றாடம் அரசு துறைகளை அனுகும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை எளிமைப்படுத்தும் வகையிலும், அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்கு சென்று சேரும் வண்ணம் “மக்களுடன் முதல்வர்” என்ற சிறப்பு திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கடலூர் மாவட்டத்தில் 18.12.2023 முதல் 06.01.2024 வரை நகர்ப்புற பகுதிகளில் 60 முகாம்களும், 11.07.2024 முதல் 31.08.2024 வரை ஊரக பகுதிகளில் 91 முகாம்களும் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், மூன்றாம் கட்டமாக தினந்தோறும் வேலைசெய்யும் கூலி தொழிலாளிகள், பொது மக்கள் இம்முகாம்களில் கலந்துகொண்டு முதலமைச்சரின் காப்பீட்டு அட்டை, குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை திருத்தங்கள், உதவித் தொகை விண்ணப்பங்கள் உள்ளிட்ட பல்வேறு மனுக்களை அளித்து பயனடையலாம்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

**அமைச்சர் கோவி. செழியன் பேச்சு!**

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதுமுதல் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளின் உயர்கல்வியை ஊக்குவிப்பதற்காக மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் உயர் கல்வியை ஊக்குவிப்பதற்காக மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தினையும் செயல்படுத்திவருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “மக்களுடன் முதல்வர் - முகாம் 3-ஆம் கட்டம்” என்ற சிறப்புத்திட்டத் தினை ஊரகப்பகுதிகளில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தியுள்ளார். இத்திட்டத்தில் மக்கள் இருக்கும் இடங்களிலேயே அனைத்து துறை அலுவலர்களுடன் முகாம்களை நடத்தி பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் 9 சட்ட மன்ற தொகுதிகளிலும் மொத்தம் 90 முகாம்கள் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் முகாம்கள் நடைபெறும் இடங்களுக்கு சென்று கோரிக்கை மனுக்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம்.

இம்முகாம்களில் தமிழ்நாடு மின்சார வாரியம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத்துறை, சுகாதார நலத்துறை, ஆதார் சேவைகள் முதலான துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு மனுக்களை பெறுகின்றனர். இம்முகாம்களில் இ-சேவை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் பதியப்படும் மனுக்களுக்கு 50 விழுக்காடு கட்டணம் மட்டுமே வசூல் செய்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணம் ஏதுமின்றி இலவசமாக சேவை வழங்கப்படுகிறது. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இன்றைய தினம் இம்முகாமில் சக்கர நாற்காலி கோரி மனுஅளித்த மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு உடனடியாக சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. மேலும், உடனுக்குடன் தீர்வு காணும் நிலையில் உள்ள மனுக்களுக்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச் செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா. சரண்யா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஷபானா அஞ்சும், குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், வடக்கு ஆர்.நாராயணசாமி, கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, கடலூர் மாநகர பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், மூ. இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் கே.பி. ஆர்.பாலமுருகன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம். ராஜாதானி அரசு கள்ளர் பள்ளியில் 5 வகுப்பறைகள் மற்றும் ஒரு அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டிடத்தை காணொளி காட்சி மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ரஞ்சித்சிங் மகாராஜன் எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.